**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 15/2020 |
| Name | : Santhi |
| P.W. | : 2 |
| Husband Name | : Paramasivam |
| Village | : Samarayapatti |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.09.2021

நான் சாமராயப்பட்டியில் குடியிருந்து கட்டிட வேலை செய்து வருகிறேன் . அ.சா.1 பரமசிவம் எனது கணவர் ஆவார். 2015 ம் வருடம் 08 வது மாதம் 24 ம் தேதி எனக்கு உடல் நிலையை சரியில்லை என்று பொள்ளாச்சிக்கு சென்றுவிட்டேன் . நாக் அங்கேயே தங்கி விட்டேன் அடுத்த நாள் எனது மகன் கௌதம் மற்றும் எனது வீட்டுக்காரர் வீட்டில் இருந்தார்கள். அப்போது எனது வீட்டுக்காரர் எனது மகனை பள்ளிக்கு விட்டுவிட்டு வேலைக்கு சென்றுவிட்டதாக என்னிடம் போன் செய்து எப்போது வருகிறாய் என்று கேட்டார். மதியம் போன் செய்தார் கதவு திறந்திருப்பதாகவும் உள்ளே போய் பார்த்ததாகவும் ரூமில் இருந்த பூட்டு திறந்திருந்ததாகவும் பீரோ நெம்பி திறந்திருந்ததாகவும் சொன்னார்

பீரோவில் இருந்த ரூ.20,000/- மதிப்புள்ள 2 பவுன் கோதுமை செயின் காணவில்லை என்று சொன்னார் எனது கணவர் போலீசில் போய் சொன்னார் . போலீசார் வாங்கி கொடுத்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள கோதுமை மாடல் செயின் என்னுடையது தான். போலீசார் எப்போது நகையை கொடுத்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. 12 வது மாதம் காவல் நிலையத்தில் நகையை காட்டினார்கள் . கோர்டில் நாங்கள் நகையை வாங்கி விட்டோம்.

குறுக்கு விசாரணை இல்லை.